

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | செப்டம்பர் 15, 2022 | புரட்சி 21 | முழக்கம் 35 | விலை: ரூ.3.00


## ‘டைம்ஸ் ஆப் இந்தியா’வில் வெளி வந்த கட்டுரை

# ‘திராவிட மாடலே’ சம வளர்ச்சியை உருவாக்கும்

***‘திராவிட மாடல்’ ஆட்சி என்பது ஓர் அரசியல் தத்துவம். அது எல்லாத் தரப்பு மக்களையும் உள்ளடக்கிய வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டது. இலக்கு நிர்ணயிக்கப்பட்ட சமூகத் தலையீடுகள் (Targeted Social Interventions) என்றழைக்கப் படுபவை அக்குறிக்கோளுக்கு வழிகாட்டு வதாக அமைந்துள்ளன.***

சமமின்மை (Inequality) என்பது இந்தியா வின் மிகப்பெரிய பிரச்சினைகளில் ஒன்று என்கிறார் புகழ்பெற்ற பொருளாதார நிபுணர் தாமஸ் பிக்கட். அப்பிரச்சினையை எதிர் கொள்வதில் சமூகத் தலையீடுகளின் பங்கு முக்கியமானது.

சமவாய்ப்புக்கான செயல்பாடுகள் தமிழ் நாட்டில் நீதிக்கட்சியின் ஆட்சியிலேயே தொடங்கிவிட்டன. சென்னை மாநகராட்சியால் பள்ளி மாணவர் களுக்கான மதிய உணவு வழங்கும் திட்டம் நவம்பர் 17, 1920இல் தொடங் கப்பட்டது. 1956ஆம் ஆண்டு இத்திட்டம் காமராஜரால் விரிவுபடுத்தப்பட்டது. அதனை அடுத்து, ஆட்சியில் இருந்த திராவிடக் கட்சிகள் நலிந்தோருக்கான நலத் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றன.

சம வாய்ப்புக்கான சமூக நீதித் திட்டங்கள் திராவிட மாடலின் முக்கிய அம்சமாகும். இத் திட்டங்கள் ஏழை, எளியவர்களின் கைகளில் நேரடியாகப் பணத்தைக் கொண்டு போய்ச் சேர்க்கின்றன. முதல்வர் ஸ்டாலினால் தொடங்கப்பட்ட மகளிருக்கான இலவசப் பேருந்துப் பயணம் இதன் அண்மைக்கால எடுத்துக்காட்டு. இலவசப் பேருந்துப் பயணத் திட்டமானது பெண்கள் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவதை 40%-இல் இருந்து 61%-ஆக உயர்த்தியிருக்கிறது என்பது மட்டுமன்று. இத்திட்டம் பெண்களுக்கு மாதம் 1000 ரூபாயை மிச்சப்படுத்திக் கொடுக்கிறது. கெய்ன்சியப் பொருளாதார விதிகளின்படி (Keynesian economics), ஏழைகளுக்குப் பணம் நேரடியாக வழங்கப்படும் போது, அது பொருளாதாரத்தில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஒரு ரூபாய் பணம் மூன்று ரூபாய் அளவிற்குத் தாக்கத்தை ஏற்படுத்து கிறது. பொருளாதாரத்தை உயர்த்துவதோடு, பெண் களின் வாங்கும் திறனை இது அதிகரிக்கின்றது. பெண்களிம் கையில் சேமிப்பாகும் இத் தொகையை, அவர்கள் குடும்பத்தின் சத்துணவு சார்ந்த செலவு களுக்காகப் பயன்படுத்துவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

உலக நாடுகளுடன் ஒப்பிடும்போது பாலினச் சமத்துவத்தில் இந்தியா மிகவும் பின்தங்கி யுள்ளது. இந்தியாவின் பெண் தொழிலாளர்கள் விழுக்காடு 18% ஆகும் (Labour force participation). ஆனால் தமிழ்நாட்டில் இது 30%-ஐ எட்டியுள்ளது. தமிழ்நாட்டின் முற்போக்கான திட்டங்கள் மூலம் இது சாத்தியமாகியுள்ளது. கல்லூரிக்குச் செல்லும் பெண்களுக்கு மாதம் ரூ. 1000/- உதவித்தொகை, பெண் பட்டதாரிகளின் திருமணத்திற்குத் தங்கம் வழங்கும் திட்டம், மதிய உணவுத் திட்டம், இலவச மிதிவண்டித் திட்டம் ஆகியவை பெண்களை முன்னேற்றும் திட்டங்களில் சில. இது போன்ற திட்டங்கள் தமிழ்நாட்டின் பள்ளிச் சேர்க்கை விழுக்காட் டினை (Enrolment ratio) 52% ஆக உயர்த்தி யுள்ளது. இது இந்திய சராசரியைவிட இரண்டு மடங்கு அதிகமாகும்.


**சேலம் தரணிதரன்**


திராவிட மாடல் வளர்ச்சி என்பது தனித்துவம் வாய்ந்தது. கேரளா, இமாச்சல பிரதேசம் போன்ற மாநிலங்கள் சமூக-பொருளாதாரக் குறியீடுகளில் வளர்ச்சி அடைந்துள்ளன. அதே நேரம், மகாராஷ்டிரம், குஜராத் போன்ற மாநிலங்கள் தொழில்துறையில் நல்ல முன்னேற்றத்தைக் கண்டுள்ளன. ஆனால், தமிழ்நாடு மட்டுமே சமூக-பொருளாதார வளர்ச்சி மட்டும் அல்லாது, தொழில் துறையிலும் சாதனை படைத்துள்ளது.

திராவிட மாடலைச் சார்ந்து இயங்கும் அரசியல், சமூகச் சிந்தனைகளிலும் மிகப்பெரும் மாற்றத்தைக் கொண்டுவந்துள்ளது. அந்த அரசியலே ஒடுக்கப்பட்டோரின் முன்னேற்றத் திற்கு வழிகோலியுள்ளது. இந்தியாவின் நான்கு தலித் தொழில் முனைவோர்களில் ஒருவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவராக இருக்கிறார் என்பதே இதற்குச் சான்று.

இந்தியாவில் தனிநபர் வருமானம் அதிகம் உள்ள மாநிலம் தமிழ்நாடு. ஆனாலும், எளிய வருக்கும் எட்டும் வகையில் இருக்கும் பொதுப் போக்குவரத்து, சிறந்த சாலை உள்கட்டமைப்பு கள் ஆகியவை காரணமாக, கார் வைத்திருப் போர் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. இத்தகைய போக்குவரத்து மற்றும் வலுவான பொது விநியோகத் திட்டம் காரணமாக, மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டின் பணவீக்க விகிதம் குறைவாகவே உள்ளது.

சமூக நீதி திட்டங்களால், தமிழ்நாட்டின் வளர்ச்சி வேகம் அதிகரித்துள்ளது. 1980-களின் பிற்பகுதி வரை, இந்திய சராசரியை ஒட்டியதாக இருந்தாலும், உலகமயமாக்கலுக்குப் பிறகு, தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் இந்திய சராசரியைவிட இரண்டரை மடங்கு அதிகரித் துள்ளது. கல்வியை மட்டுமல்லாது, முதலீட்டை யும் ஜனநாயகப்படுத்தியதே இதற்குக் காரண மாகும்.

பிரதமர் நரேந்திர மோடியின் இலக்குப்படி அடுத்த 25 ஆண்டுகளுக்குள் இந்தியா முன்னேறிய நாடாக ஆக வேண்டுமென்றால், அந்த இலக்கை அடைய உதவும் ஒரே மாடல், திராவிட மாடல்தான். திராவிட மாடல் வளர்ச்சி மட்டுமே ஒவ்வொரு குடிமகனுக்கும் சமமான, நிலைத்திருக்கக்கூடிய வளர்ச்சியை வழங்கு வதாகும்.

(நன்றி : டைம்ஸ் ஆஃப் இந்தியா, 30.08.2022)

**மொழிபெயர்ப்பு :**

**வெற்றிச்செல்வன், திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

## 30% பெண்கள் இடஒதுக்கீட்டுக்கு எதிரான தீர்ப்பு

*சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி முனீஸ்வர்நாத் பண்டாரி அமர்வு தமிழ்நாடு அரசு தேர்வாணையத்திற்கு தற்போது பெண்களுக்கான வேலைவாய்ப்பு இட ஒதுக்கீட்டில் பின்பற்றப்படும் முறையை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறது. தற்போது அரசு தேர்வாணையம் பின்பற்றப்படும் நடைமுறை சட்டத்திற்கு புறம்பானது என்றும் அது சுட்டிக்காட்டியிருக்கிறது.*

*இட ஒதுக்கீட்டில் இரண்டு வகை உண்டு. ஒன்று Horizontal Reservation என்று கூறப்படுகிறது. OC, BC, MBC, SC, ST இந்தப் பிரிவினர்களுக்கான இட ஒதுக்கீடு தர அடிப்படையிலான இட ஒதுக்கீடு இந்த அடிப்படையில் தான் முதலில் இட ஒதுக்கீடுகளை பூர்த்தி செய்ய வேண்டும். இதில், தமிழ்நாட்டில் அமலில் உள்ள பெண்களுக்கான 30% கோட்டா நிரம்பி விட்டால் பிறகு Vertical Reservation என்று சொல்லப்படுகிற பெண்களுக்கான தனி இட ஒதுக்கீட்டில் பெண்களை நிரப்பக் கூடாது என்று உயர்நீதிமன்றம் கூறியிருக்கிறது.*

*தற்போது தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம் 30% பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை பூர்த்தி செய்து விட்டு அதற்குப் பிறகு OC, BC, MBC, SC, ST-க்கான இடங்களை பூர்த்தி செய்து அதில் தகுதி அடிப்படையில் பெண்களை சேர்த்து வருகிறது. இதன் காரணமாக பெண்களின் இட ஒதுக்கீடு எண்ணிக்கை 30% யும் தாண்டி விடுகிறது என்று உயர்நீதிமன்றம் மிகவும் கவலைப்பட்டு இந்த தீர்ப்பை வழங்கி இருக்கிறது. அரசியல் சட்டத்தில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு என்று எதுவும் கிடையாது என்றும், சொல்லப்போனால் ஆண்கள் பெண்கள் என்ற பாகுபாடே சட்டத்தின்படி தவறு என்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்திருக்கிறது. இந்த பாகுபாடு இருக்கிற காரணத்தினால் தான் பெண்களுக்கான இட ஒதுக்கீடுகள் Vertical Reservation என்பவை கொண்டுவரப்பட வேண்டிய அவசியமே எழுந்தது என்பதை நீதிமன்றம் உணரவில்லை. கால்நடை மருத்துவப் படப்பிடிப்பில் பெண்களுக்கான இடஒதுக்கீடு 30 சதவீதத்தையும் தாண்டி விட்டது என்றும் நீதிமன்றம் கூறுகிறது.*

*ஏற்கெனவே இப்படித்தான் இட ஒதுக்கீடு கொள்கையை பார்ப்பனர்களும், உயர்சாதியினரும் எதிர்த்து வந்தார்கள். தகுதி உள்ள நல்ல மதிப்பெண் பெற்ற பார்ப்பன உயர்சாதிக்காரர்கள் புறக்கணிக்கப்பட்டு இட ஒதுக்கீட்டின் காரணமாக பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட குறைந்த மதிப்பெண் பெற்றவர்கள் வந்துவிடுகிறார்கள், எனவே இட ஒதுக்கீடு முறையே கூடாது என்று ஒருகாலத்தில் அவர்கள் வாதிட்டு வந்தார்கள். பிறகு EWS உயர்சாதியினருக்கு மட்டும் பொருளாதார அடிப்படையில் 10 சதவீத இட ஒதுக்கீடு என்று வந்த பிறகு அந்த வாதத்தை அப்படியே கை விட்டுவிட்டார்கள்.*

*ஒதுக்கீடு சமூக நீதி என்பது சமத்துவத்தை உள்ளடக்கியது. பெண்கள் இன்றைக்கு 50% மக்கள் தொகை எண்ணிக்கையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு 50% இடங்கள் அனைத்துத் துறைகளிலும் பின்பற்றப்படுகிறதா ? நீதி மன்றங்களில் எத்தனைப் பெண்கள் இருக்கிறார்கள் ? அமைச்சரவையில் எத்தனைப் பெண்கள் இருக்கிறார்கள் ? உயர் அதிகாரங்களில் முடிவெடுக்கும் நிலையில் எத்தனைப் பெண்கள் இருக்கிறார்கள் ? பெண்களுக்கான பிரதிநிதித்துவம் என்பது அறவே இல்லாத நிலை. எனவே இத்தகைய இட ஒதுக்கீடுகளை பின்பற்றினால் தான் அவர்கள் உயர்ந்த இடத்தை பிடிக்க முடியும் என்கிற போது எண்ணிக்கையை வைத்துக் கொண்டு பெண்கள் 30% ற்கு மேல் போகவே கூடாது என்று பேசுவது சமத்துவத்திற்கு சமூக நீதிக்கு எதிரானது. தமிழ்நாடு அரசு உயர்நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பை சரி செய்வதற்கான சட்ட ஏற்பாடுகளை ஆழமாக பரிசீலிக்க வேண்டும்.*

தலையங்கம்

# ‘பெரியார்’ மண்ணா? ‘ஆன்மீக’ மண்ணா?

பெரியார் தமிழ்நாட்டில் தோற்றுப் போய் விட்டார்; மக்கள் ஆன்மீகம் நோக்கி திரும்பி வருகிறார்கள் என்ற கருத்து தமிழ்நாட்டில் பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களால் பரப்பப்பட்டு வருகிறது.

‘பெரியார் மண்’, ‘ஆன்மீகம்’ என்பதற்கான மதிப்பீடுகளை எவ்வாறு வரையறுப்பது? இந்த கேள்விகளுக்கான விடையில் தான் தெளிவு பெற முடியும்.

ஆன்மீகம் என்பது ஒவ்வொரு மனிதரும் தனக்குள் உருவாக்கிக் கொள்ளும் ஒரு சிந்தனைப் போக்கு. அது வழிபாடுகளிலும் சடங்குகளிலும் இல்லை. ஆனால், ‘ஆன்மீகம்’ என்பதை பார்ப்பனியம் தனக்கான முகமூடிக் கவசமாக்கிக் கொண்டு தன்னை உயிர்ப்பிக்கத் துடிக்கிறது. வைதீக வேத மரபில் தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட பார்ப்பனர்கள், யாகங்கள், சடங்குகளை, உயிர்ப் பலிகளைக் கேள்வி கேட்ட திராவிடர்களை அழித்தொழிக்க வரலாறு நெடுக சூழ்ச்சிகளை படுகொலைகளை நடத்தியதோடு அதற்கு அவதாரம், புராணம், இதிகாச கற்பனைகளை உருவாக்கி, வெகுமக்களை நம்ப வைத்தனர். உருவ வழிபாடு வழக்கம் இல்லாத அவர்கள் பிற்காலத்தில் கோயில் களையும் சிலை வழிபாட்டையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து ‘இந்து’ என்ற போர்வைக்குள் பதுங்கினர்.

இந்து மதத்தோடு தொடர்பே இல்லாத புத்தம், சைவம், சமணம், வைணவம் உள்ளிட்ட அனைத்து மதப் பிரிவுகளையும் இந்து மதம் என்ற குடுவைக்குள் திணித்து அதற்கு சட்டப் பாதுகாப்பு களையும் தேடிக் கொண்டனர். இதை எதிர்த்து வைதீக சமூகக் கொடுமைகளை கேள்விக்கு உட்படுத்தியவர்களின் அடையாளங்களை அழித்ததோடு ஊடுருவி சீர்குலைத்து தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொண்டவர்கள் தான் இப்போது ‘ஆன்மீகம்’ என்ற போர்வைக்குள் பதுங்கி நிற்கிறார்கள்.

இதற்கு அரசியல் வடிவம் கொடுக்க அரசியல் சட்டத்தின் கட்டமைப்புகளில் ஓட்டைகளைப் போட்டு ‘தேசபக்தி’, ‘தேசியம்’ என்பதையும் இணைத்துக் கொண்டு ஒற்றை இந்தியா என்ற பார்ப்பன ‘சாம்ராஜ்யம்’ நோக்கி நாட்டை இழுத்துச் செல் கிறார்கள். அதிகாரத்தைக் கைப்பற்றி அரசு நிறுவனங்கள் அனைத்தையும் முறைகேடாகப் பயன்படுத்தி பார்ப்பனிய ஆட்சியை உருவாக்கிட இவர்களுக்கு இப்போது ஆன்மீகமும் திராவிட எதிர்ப்பும் கட்டாயமாகிறது. ஒரு பக்கம் தங்களை தமிழின் பற்றாளர்கள் என்றும் பக்தி இலக்கியங்களே தமிழை வளர்த்தன என்றும் கூறிக் கொண்டு மற்றொரு பக்கம் - சமஸ்கிருதப் பெயர் சூட்டலும், சமஸ்கிருத வேத சடங்குகளை தமிழர்கள் ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்றும் பெரியார் இயக்கம் தோற்று விட்டது என்றும் முரண்பாடாகப் பேசிக் கொண்டிருக் கிறார்கள்.

‘நாங்கள் சூத்திரர்; பஞ்சமர் என்பதை ஏற்கிறோம்; அதுவே கடவுள் - மதம் விதித்த தர்மம்’ என்ற கருத்தை ஏற்றுக் கொண்டு தான் வெகுமக்கள் கடவுள் - மதத்தை நம்புகிறார்களா? கோயிலுக்கு போகும் தமிழர்கள் சடங்கு வழிபாடுகளில் மூழ்கியுள்ள தமிழர்கள் தங்கள் வாழ்வுரிமையை, கல்வி உரிமையை, வேலை வாய்ப்பு உரிமையை, சுயமரியாதை உரிமையை ‘ஆன்மீக’ நம்பிக்கைகளே காப்பாற்றி விடும் என்று நம்பிக் கொண்டு இருக்கிறார்களா? நிச்சயமாக இல்லை. ‘ஆன்மீகம்’ சடங்குகளாக குறியீடுகளாக பழக்கமாக மாறிப் போய் நிற்கிறதே தவிர, அது மட்டுமே தங்களின் வாழ்க்கையை நிர்ணயிக்கிறது என்று நம்புகிற ஒற்றை மனிதரையாவது இவர்களால் அடையாளம் காட்ட முடியுமா?

இந்த சிந்தனை மாற்றத்துக்கு அடித்தள மிட்டது பெரியார் திராவிட இயக்கம் அல்லவா? பெரியார் கூறிய இடஒதுக்கீடு உரிமையை அவர்களும் பேசுகிறார்கள். பெரியார் வலியுறுத்திய மொழி உணர்வை இவர்களும் பேச வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். சாஸ்திரங்களால் மறுக்கப்பட்ட பெண் கல்வி உரிமையை இப்போது இவர்களால் நியாயப்படுத்த பெண்களுக்கு படிப்பு எதற்கு என்று கேட்க முடியுமா? பெரியாரின் கடவுள் - மத மறுப்பின் அடிப்படை என்ன? சமத்துவத்தின் தடைக்கல்லாக அவை குறுக்கே நிற்பதால் எழுந்த எதிர்ப்பு; அவைகள் இனி உரிமைகளில் குறுக்கிட முடியாது என்ற கருத்துக்கு சமூகம் வந்து விட்டது. இது பெரியாரின் வெற்றியா? ஆன்மீகத்தின் வெற்றியா? அனைத்து இந்துக்களும் அர்ச்சகராக முடியாது; பிராமண உயர்சாதி உட்பிரிவுக்கு மட்டுமே அந்த உரிமை என்று என்று வெளிப்படையாகப் பேச முடியாமல் ‘ஆகமம்’ என்ற பெயரைப் பயன்படுத்தி பதுங்க வைத்திருப்பதே பெரியாருக்குக் கிடைத்த வெற்றி தானே?

வேதகாலத்தில் தொடங்கிய ஆரிய - திராவிட (அசுரப்) போராட்டம் வேறு வடிவங்களில். இப்போது அந்தக் களம் கூர்மையடைந்து வருகிறது. ‘வர்ணாஸ்ரமம்’, ‘சனாதனம்’ என்பவற்றுக்கு மாற்றாக ‘ஆன்மீகம்’, ‘தேசியம்’, ‘தேச பக்தி’ என்று பேசிக் கொண்டு இன எதிரிகள் களத்தில் நிற்கிறார்கள். ஆன்மீகம் தேய்பிறையாகவும் பெரியாரும் திராவிடமும் வளர்பிறையாகவும் வளர்ந்து வருகிறது. இதுவே வரலாற்றின் இயங்கியல் போக்கு!

# ‘நீட்’ தனியார் கட்டணக் கொள்ளைக்கு ஆதரவான உயர்நீதிமன்றத் தீர்ப்பு

நீட் தேர்வை முதலில் அறிமுகப்படுத்தியபோது அதை ஆதரிப்பவர்கள் ஒரு வாதத்தை கூறினார்கள்; தனியார் கல்லூரிகளின் கட்டணக் கொள்ளையைத் தடுத்து நிறுத்துவதற்குத் தான் நீட் தேர்வை கொண்டு வருகிறோம், என்று கூறினார்கள். அது உண்மைதானா ? இப்போது என்ன நடந்து கொண்டு இருக்கிறது ?

நீட் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களாக அறிவிக்கப்பட்டவர்கள், மிக மிக குறைந்த மதிப்பெண்கள் பெற்றாலே போதும் என்ற நிலைக்கு நீட் தேர்வினுடைய தகுதி மதிப்பெண் அளவு குறைக்கப்பட்டு விட்டது. இதனால் மிக மிக குறைந்த மதிப்பெண் பெற்ற மாணவர்கள் கூட வசதி உள்ள மாணவர்களாக இருப்பார்களேயானால் அவர்கள் தனியார் மருத்துவக் கல்லூரியில் சேர முடியும். அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்கள் வசதி இல்லாதவர்களாக இருந்தால் அவர்கள் மருத்துவக் கல்லூரியில் சேர முடியாது, என்ற நிலை வந்துவிட்டது.

மருத்துவக் கல்லூரி கட்டணக் கொள்ளையைத் தடுக்கவே ‘நீட்’ என்ற வாதம் அடிபட்டு போய் விட்டது. இதற்கு வலு சேர்க்கும் விதத்தில் உயர்நீதிமன்றத் தீர்ப்பும் வந்திருக்கிறது. தனியார் மருத்துவக் கல்லூரிகளில் 50% இடங்கள் அரசு கோட்டாவின் கீழ் நிரப்பப்படுகின்றன. இந்த இடங்களுக்கு அரசு மருத்துவக் கல்லூரியில் வசூலிக்கப்படுகிற அதே கட்டணம் தான் என்று மருத்துவக் கவுன்சில் உத்தரவு பிறப்பித்து இருந்தது. இதை எதிர்த்து தனியார் மருத்துவக் கல்லூரிகள் தொடர்ந்த வழக்கில் உயர்நீதிமன்றம், ‘இதற்கு கட்டண நிர்ணயம் செய்யக் கூடாது என்று மருத்துவக் கவுன்சிலுக்கு தாக்கீது அனுப்பியுள்ளது”.

தனியார் மருத்துவக் கல்லூரியின் கட்டணக் கொள்ளையை ஒழிப்பதற்காகத்தான் நீட் என்று வாதிட்டவர்கள் இதற்கு என்ன பதிலை கூறப்போகிறார்கள்.

கோச்சிங் சென்டரில் சேர்ந்து செலவு செய்யக்கூடிய மாணவர்கள் மட்டுமே தேர்ச்சி பெற முடியும் என்ற நிலையை ‘நீட்’ உருவாக்கி விட்டது. அதுவும் 12 ஆம் வகுப்பு முடித்து இரண்டு ஆண்டுகள் கோச்சிங் பெற்றதற்குப் பிறகு தான் தேர்ச்சி பெற முடியும் என்ற நிலையையும் இது உருவாக்கிவிட்டது.

## பெரியார் மண் - ராகுல் பெருமிதம்


ராகுல் காந்தி மேற்கொண்டுள்ள நடைபயணம் “இந்திய ஒற்றுமைப் பயணம் என்று சொல்லப்பட்டாலும், இந்திய மக்களின் ஒற்றுமையைக் காப்பதே பயணத்தின் நோக்கம்” என்று இராகுல் காந்தி தந்திருக்கிற விளக்கம் மிகச் சிறப்பான ஒன்று. மண்ணின் ஒருமைப்பாட்டை விட மக்களின் ஒருமைப்பாடு தான் மிக மிக முக்கியமானது என்ற ஆழ்ந்த கருத்தோட்டத்தில் இந்தக் கருத்தை அவர் வெளிப்படுத்தி இருக்கிறார்.

குமரியில் நடை பயணத்தை முடித்துவிட்டு கேரளாவிற்கு செல்வதற்கு முன், “பெரியார் மண்ணை வருத்தத்தோடு நான் பிரிந்து செல்கிறேன். தமிழ் மக்களிடம் எனக்கு தனிப்பட்ட ஈடுபாடு உண்டு” என்று உணர்வு பொங்க அவர் கூறியிருக்கிறார். “நாராயணகுரு மண்ணான கேரளாவில் அடியெடுத்து வைக்கப் போகிறேன்” என்று கேரளாவில் சமூக சீர்திருத்தம் பேசிய நாராயண குருவின் மண்ணாக அவர் கேரளாவையும் பார்க்கிறார்.

இராகுல் காந்தி காங்கிரஸ் கட்சியின் பண்பு மாற்றத்தில் சில மாற்றங்களை கொண்டு வர வேண்டும் என்று அவர் போராடிக் கொண்டிருக்கிறார். இந்த சூழ்நிலையில், இந்தியாவை ஒற்றை மனுவாத பார்ப்பன இராஜ்ஜியத்தை நோக்கி நகர்த்திக் கொண்டிருக்கிற மோடி ஆட்சியை வீழ்த்துவதற்கு இந்தப் பயணம் மிக முக்கியமான வரலாற்றுத் தேவையாக இருக்கிறது. அந்த வகையில் இந்தப் பயணத்தை நாம் முழுமையாக ஆதரிக்கிறோம்.

அதிலும் குறிப்பாக, சமூக நீதிப் பார்வையில் காங்கிரசில் மாற்றம் வேண்டும் என்பதற்காக கட்சிக்குள் அவர் நடத்துகிற போராட்டம் என்பது உண்மையிலேயே தலைமைப் பதவி என்பதை விட, கட்சிக்குள்ளான ஒரு கொள்கைப் போராட்டம் என்ற பார்வையிலேயே நாம் பார்க்க வேண்டி இருக்கிறது.

### ஆங்கிலோ இந்தியர்களுக்காக...



ஆங்கிலோ - இந்தியர்கள் எப்படியோ அதேபோலத்தான் இந் நாட்டுப் பார்ப்பனர்களும். ஆங்கிலோ - இந்தியர்கள் நம் நாட்டுத் தாய்மார்கள் ஈன்றெடுத்தவர்கள் தாமே! ஆனால், அவர்களுக்குச் சற்றாவது நம் நாட்டு உணர்ச்சி இருக்கிறதா? நமது மக்களைப் பார்த்தால், ‘டேய், டமில் மனுசா’ என்று கேவலமாகத் தானே கூறுகின்றனர்? அவர்கள் யார்? எந்த நாட்டில் எப்படிப் பிறந்தவர்கள் என்ற வரலாற்றை அறியாமல், தான் ஏதோ அய்ரோப்பாவில் பிறந்து இங்கு குடியேறியதுபோல் சாதி ஆணவத்துடன் அல்லவா நடக்கிறார்கள்!

அதைப்போலவே, இந்நாட்டுப் பார்ப்பனர்களும், மேல் நாட்டில் இருந்து வந்து குடியேறிய ஆரியர்களுக்கும், நம் நாட்டவர்களுக்கும் பிறந்தவர்களாய் இருந்தும்கூட, ஆரிய சாதி முறைகளையும், அதற்கான ஆணவத்தையும் கொண்டு, நாட்டுக்குரிய நம்மை கீழ்ச் சாதிகளாக - அடிமைகளாக மதித்து நடத்துவதும், அதற்கேற்ப நம் நாட்டு மன்னர்களை ஏமாற்றி, சாதி, சமய, மதம், கடவுள், புராணம், இதிகாசங்களின் பேரால் தங்களுக்குத் தனிச் சலுகைகளும் பெற்று, பாடுபட்டு உழைக்கும் ஏழை மக்களுக்கு வாழ்வில் வறுமையும் தொல்லையும் இருக்க, பாடுபட்டு உழைக்காத ஒரு கூட்டத்துக்கு வாழ்க்கையிலே மிதமிஞ்சிய ஆதிக்கமும் இருந்து வருகிறது.

‘குடிஅரசு’ 28.5.1949

## பயிலரங்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி விளக்கினார்

# கோல்வாக்கர் கொள்கையையே பா.ஜ.க. செயல்படுத்துகிறது

*திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பாக, "யார் எதிரிகள்" என்ற தலைப்பில் 31.07.2022 அன்று சென்னை அம்பத்தூர் தாய்த் தமிழ் பள்ளியில் நடைபெற்ற பயிலரங்கில் ஆர்.எஸ்.எஸ்.சுக்கு கருத்தியலை வழங்கிய கோல்வாக்கர் கொள்கைகளை மோடி ஆட்சி செயல்படுத்தி வருவதை கழகத் தலைவர் கொளத்தூர் மணி பட்டியலிட்டார். (சென்ற இதழ் தொடர்ச்சி)*

அமிர்தசரசில் 1908இல் காங்கிரஸ் மாநாடு நடைபெறுகிறது. அந்த மாநாட்டில் தான் "வந்தே மாதரம்" பாடலை ஒட்டிய ஒரு விவாதம் நடைபெறுகிறது. வந்தே மாதரம் 1875இல் எழுதப்பட்ட தனிப்பாடல். சமஸ்கிருதம், வங்காளம் மீண்டும் சமஸ்கிருதம் இப்படி எழுதப்பட்ட ஒரு நீண்ட பாடல். 'வெற்றியடைந்த ஒரு போர் வீரன் காளியைப் பார்த்து நன்றி கூறுகிறான்' இது தான் வந்தே மாதர பாடலின் கரு. 1875இல் காளியை பார்த்து எழுதிய இந்தப் பாடலை பக்கிம் சந்த் சட்டர்ஜி என்பவர் 'ஆனந்த மடம்' என்ற அவரது நாவலில் இந்தப் பாடலை திணிக்கிறார். கதை என்னவென்றால் போர் நடைபெறுகிறது. ஆங்கிலேயர்கள் தலைமையில் இஸ்லாமியர்கள் போராடுகிறார்கள். மற்றொரு பக்கம் அரசர்கள் தரப்பிலிருந்து இந்துக்கள் போராடுகிறார்கள். இஸ்லாமியர்கள் தோற்கடிக்கப்படுகிறார்கள். அந்த இந்து படைகளுக்கு தலைமை தாங்கிய சன்னியாசி 'சத்யானந்தா' அவர் காளியை பார்த்து பாடுகிற பாடல் தான் அந்த நாவலில் கொண்டு சேர்க்கப்பட்ட பாடல். இவர் பல நாவல்களை எழுதியுள்ளார். சீதா இராமன் என்ற நாவலும் எழுதியுள்ளார். அதிலும் இது போன்று தான் எழுதியுள்ளார். அதிலும் இஸ்லாமியர்களை பற்றி தான் எழுதியிருப்பார். அந்த நூலும் 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்ட நூல். இந்த நேரத்தில் தான் இந்துக்கள் தங்களின் மேலாண்மையை நிறுவியாக வேண்டும் என்ற காலகட்டம் அது.

இந்து மேலாண்மையை நிறுவியாக வேண்டும் என்றத் தலைவர்களை நாம் பார்க்க வேண்டும். முதலில் 'இந்து சபா' என்று பஞ்சாபில் தான் ஆரம்பிக்கிறார்கள். அதில் லாலா லஜபதி ராய், மதன் மோகன் மாளவியா போன்றவர்கள் இருக்கிறார்கள்.

இவர்களெல்லாம் மிதவாதிகளாக இருந்தார்கள் என்று அது சாவர்க்கருக்கு மாறியதோ அப்போது தீவிரவாத கட்சியாக மாறுகிறது. முதலில் தன் மதத்தில் உள்ள மூட நம்பிக்கைகளை ஒழிக்க வேண்டும், கைம்பெண் மணத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று லாலாலஜபதி ராய் பேசுகிறார். மாளவியா இன்னும் கொஞ்சம் பிற்போக்குவாதி. அதற்கு அடுத்து மோசமான பிறபோக்குவாதி சாவர்க்கர். சாவர்க்கர் கூட அவர்கள் பார்வையில் முற்போக்குவாதி தான். பசு வதையை அவர் எதிர்க்கவில்லை. இந்துக்கள் மாட்டுக்கறி சாப்பிட வேண்டும், பசு மூத்திரத்தை குடிப்பதை விட வேண்டும் என்று பேசியிருக்கிறார்.

'ஹர்தயாள்' என்ற ஒரு புரட்சியாளர் இருந்தார். அவர் ஒரு மார்க்சிஸ்ட். அவரைப் பற்றி ஆய்வு செய்து 'எமிலி கிளாரா பிரவுன்' ஒரு நூலை எழுதியுள்ளார். வரிசைப்படி கூறினால், 'An atheist, Revolutionary, A Buddhist, Pacifist' இப்படி வரிசைப் படுத்தி அந்த நூலில் குறிப்பிடப்பட்டிருக்கும். அவர் வெளிநாட்டிற்கு சென்று முனைவர் பட்டமெல்லாம் பெற்று வந்தார். அவர் 'மகரிஷி மார்க்ஸ்' என்று புத்தகம் எழுதியுள்ளார். இவர் எப்படி இருந்தார் என்றால் இந்த நாட்டிலிருந்து இஸ்லாமியர்களை துரத்த வேண்டும் என்று கூறுபவராக இருந்தார்.

ஹர்தயாள் ஒரு புத்தகத்தில் 'அரசியல் ஏற்பாடு' என்று ஒரு அறிக்கை வெளியிடுகிறார். அதில், "இந்து இனம், இந்துஸ்தானம் மற்றும் பஞ்சாபின் எதிர்காலம் எதிர்வரும் நான்கு தூண்களை சார்ந்து இருக்கிறது. 1) இந்து சங்காத்தன், 2) இந்து இராஜ்ஜியம், 3) முஸ்லிம் சுத்தி, 4) ஆஃப்கானிஸ்தானம் மற்றும் எல்லை மாகாணங்களை கைப்பற்றி சுத்திகரிப்பது இந்த நான்கு இலக்குகளை இந்து தேசம் அடையவில்லையெனில் நம் குழந்தைகள், பேரக்குழந்தைகளின் பாதுகாப்பு எப்போதுமே அபாயத்தில் இருக்கும். இந்து இனத்தின் பாதுகாப்பு என்பது இயலாததாகிவிடும். இந்து இனத்திற்கு ஒரே வரலாறு தான், அதன் நிறுவனங்கள் ஒரே தன்மை கொண்டவை. முசல்மான்களும், கிறிஸ்தவர்களும் அன்னிய மதங்களைப் பின்பற்றுவதாலும் பாரசீக மொழியையும், அய்ரோப்பிய நிறுவனங்களை



அவர்கள் நேசிப்பதாலும் இந்து மத அமைப்பிலிருந்து அவர்கள் தூர விலகியே இருக்கின்றனர். இந்துக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள விரும்பினால், அவர்கள் ஆஃப்கானிஸ்தானத்தையும் எல்லை மாநிலத்தையும் கைப்பற்றி அனைத்து மலைவாழ் மக்களையும் மதமாற்றம் செய்ய வேண்டும்" இப்படி கூறுபவர் யார்? ஒரு மார்க்சிய வாதியே கூறும்படி இருக்கிறதென்றால் யோசித்துப் பாருங்கள்.

இதற்குப் பின்னால் தான் ஆர்.எஸ்.எஸ் வருகிறது. இதே கொள்கையைத் தானே ஆர்.எஸ்.எஸ் கொண்டுள்ளது. பிறகு எதற்கு ஆர்.எஸ்.எஸ்? ஆர்.எஸ்.எஸ்-அய் உருவாக்கிய அனைவருமே இந்து மகா சபையினர் தான். புதியதாக யாரும் வந்து ஆரம்பிக்கவில்லை. ஆரம்பித்த 5 பேரும் இந்து மகா சபையில் இருந்தவர்கள் தான். ஆனால் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கூடாது என்று முடிவு செய்கிறார்கள். இந்து மகாசபையில் இருப்பவர்கள் சண்டையை தவிர்க்கும் பண்பாளர்களாக இருந்தனர். ஆனால் ஆர்.எஸ் எஸ்காரர்கள் கரடு முரடாக சண்டையிடுபவர்களாக இருக்க வேண்டும் என்று எண்ணினர். பிற்காலத்தில் இரண்டிற்கும் உள்ள இந்த வேறுபாட்டை அவர்களே பிற்காலத்தில் குறிப்பிடுகிறார்கள்.

> **இந்து சாம்ராஜ்ஜியத்தை 'சிவாஜி' படைத்ததாக கூறுவார்கள். ஆனால் சிவாஜி படையில் அதிகமாக இஸ்லாமியர்கள் இருந்தார்கள். இதை கோல்வாக்கரும் குறிப்பிட்டுள்ளார். கோவிந்த் பன்சாரே அதைப் பற்றித் தான் நூல் எழுதினார். சிவாஜி எவ்வளவு இஸ்லாமியர்களை நம்பத்தகுந்தவாறு தன்னுடன் வைத்திருந்தார் என்பதைத் தான் ஆதாரங்களுடன் நூல் எழுதினார். அதற்காகத்தான் கொல்லப்பட்டார். அந்த நூல் இலட்சக்கணக்கில் விற்கப்பட்டது. பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது.**

அய்ந்து பேர் ஆரம்பிக்கிறார்கள், 1) டாக்டர் பி.எஸ் மூஞ்சே, (இவர் முசோலினியை சந்தித்தவர்) 2) டாக்டர் பராஞ்சிபே, 3) டாக்டர் கே.பி. ஹெட்கேவர், 4) டாக்டர் கோல்கர், 5) டாக்டர் பாபாராவ் சாவர்க்கர், இவர் சாவர்க்கரின் அண்ணன். இவர்களெல்லாம் இணைந்து தான் ஆர்.எஸ்.எஸ் -அய் தொடங்குகிறார்கள். ஆரம்பித்த பின்னும் ஆர்.எஸ்.எஸ் யும், இந்து மகா சபையும் வேறு வேறு அல்ல. 1931 வரைக்கும் ஹெட்கேவர் ஆர்.எஸ்.எஸ் ற்கு தலைவர், இந்து மகா சபைக்கு பொதுச் செயலாளர்.

ஆர்.எஸ்.எஸ் என்ற அமைப்பு செப்டம்பர் 1925 விஜயதசமியில் ஹெட்கேவர் இல்லத்தில் கூடி தொடங்குகிறார்கள். ஆர்.எஸ்.எஸ் இன் தத்துவத் தலைவர் கோல்வாக்கர். இவரின் நூல் 'ஞான கங்கை' என்று தமிழில் வந்துள்ளது. அதில் எதுவெல்லாம் நமது நாடு என்று குறிப்பிட்டிருப்பார். "எந்த ஒரு புனித நதியின் பெயரால் நமக்கு 'ஹிந்து' என்று பெயர் வந்ததோ, நம் நாட்டுக்கு ஹிந்துஸ்தானம் என்று பெயர் வந்ததோ அந்த புனித நதியான சிந்து நதியில் நீராடும் வாய்ப்பே நமக்கில்லை. உலகிற்கெல்லாம் இந்து மதத்தைப் பரப்பிய கேந்திரமான 'தட்ஷசீலம்'.

இன்று நம் நாட்டில் இல்லை. அரக்கர் இரணியனிடமிருந்து காக்க வந்த அவதார தலமாகிய மூல்ஸ்தானம் நம்மிடம் இல்லை "இவையனைத்தும் பாகிஸ்தானில் உள்ளது. இல்லை என்று சொல்வது எதனாலென்றால் அவற்றை இணைத்துக் கொள்ள வேண்டும்" என்ற பொருளில் கூறுகிறார். "பாரதியர் என்பதும் மிகப் பழமையான பெயர். பாரதம் என்ற பெயர் வேதங்களிலேயே வருகிறது. இந்தியன் என்ற சொல்லின் மொழி பெயர்ப்பாக இந்த நாட்டில் வாழும் முஸ்லிம், கிறிஸ்துவர்கள், பார்சிகள் என அனைவரையும் குறிக்கும் சொல்லாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே நமது சமுதாயத்தை நாம் குறிப்பிட விரும்பும்போது 'பாரதியர்' என்ற சொல் தவறான சொல். எனவே நாம் நினைப்பதை முழுமையாக வெளிப்படுத்தும் சொல் 'ஹிந்து' என்ற சொல் தான் வெளிப்படுத்தும்" என்று கோல்வாக்கர் குறிப்பிடுகிறார்.

கோரேகான் பிரச்சனையைப் பற்றியும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. "பேஷ்வாக்களை வெற்றி கொண்டதை சித்தரிப்பதற்கு பூனாவுக்கு அருகில் ஆங்கிலேயர் எழுப்பிய ஒரு வெற்றித் தூண் உள்ளது. ஒரு சமயம் புகழ்பெற்ற அரிஜனங்களின் தலைவர் ஒருவர் (அம்பேத்கர்) அத்தூண் அருகில் தமது குலத்தவர் மத்தியில் ஓர் உரை நிகழ்த்தினார். அப்போது அவர் அரிஜனங்கள் பிராமணர்கள் மேல் கொண்ட வெற்றி என்று குறிப்பிட்டார். ஏனெனில் அரிஜனங்கள் தான் ஆங்கிலேயரின் கீழ் போரிட்டு, பேஷ்வாக்களை அதாவது பிராமணர்களை தோற்கடித்தனர் என்றார். இழிவான அடிமைச் சின்னத்தை வெற்றியின் சின்னம் என்றும் ஒரு பெருந்தலைவர் ஒருவரே புகழ்ந்து கூறுவதும் அன்னியர்களுக்கு அடிமையாயிருந்தும் நமது சொந்த சகோதரர்களுக்கு எதிராக சண்டையிட்டது ஒரு பெரும் சாதனையாக எண்ணுவதும் நெஞ்சை பிளக்கவில்லையா?" என்று கோல்வாக்கர் குறிப்பிடுகிறார். இப்போது புரிகிறதா ஏன் தற்போது பாஜகவினரால் வழக்குகள் பதியப்படுகிறது என்று? கோல்வாக்கரின் நெஞ்சு பிளந்ததற்கு தான் இப்போது இத்தனை பேரின் மீது வழக்குகள் பாய்ந்து கொண்டே இருக்கின்றன.

தருண் விஜய், திருக்குறளை உலக நூலாக்கப் போகிறேன் என்று கூறிக்கொண்டிருந்தார். அது உங்களுக்குத் தெரியும். அந்த முயற்சி எங்கிருந்து வந்தது என்று பாருங்கள், "திருவள்ளுவ முனிவர் இதன் ஆசிரியர். இவரை நாம் ஏகாத்மாதா ஸ்தோத்திரத்தில் நினைவு கூறுகிறோம். (இதில் பல பேரை இணைத்துக் கொள்வார்கள், தற்போது காந்தி, அம்பேத்கரைக் கூட அந்த ஸ்தோத்திரத்தில் அணைத்துக் கொண்டனர்) மிக புகழ் பெற்ற வ.வே.சு அய்யர் என்ற புரட்சியாளர் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். திருக்குறளில் கூறப்பட்டுள்ள விசியம் தான் என்ன? பழமையான ஹிந்து தத்துவமாகிய நான்கு வித உறுதிப் பொருள், எனவே திருக்குறள் ஹிந்து நூல்" என்று கோல்வாக்கர் குறிப்பிடுகிறார். ஏன் தருண் விஜய் திருவள்ளுவருக்கு சிலை வைக்கப் போகிறேன் என்று கூறினார் என்று புரிகிறதா? ஏன் இவற்றை கூறுகிறேன் என்றால், ஆர்.எஸ்.எஸ். தத்துவத்தை அறிந்து கொண்டால் தான் இன்றைக்கு அரசு நடைமுறைப் படுத்துவதை நம்மால் புரிந்து கொள்ள முடியும். இது பாஜகவின் தத்துவங்கள் அல்ல; ஆர்.எஸ்.எஸ் -இன் தத்துவம்.

இந்து சாம்ராஜ்ஜியத்தை 'சிவாஜி' படைத்ததாக கூறுவார்கள். ஆனால் சிவாஜி படையில் அதிகமாக இஸ்லாமியர்கள் இருந்தார்கள். இதை கோல்வாக்கரும் குறிப்பிட்டுள்ளார். கோவிந்த் பன்சாரே அதைப் பற்றித் தான் நூல் எழுதினார். சிவாஜி எவ்வளவு இஸ்லாமியர்களை நம்பத்தகுந்தவாறு தன்னுடன் வைத்திருந்தார் என்பதைத் தான் ஆதாரங்களுடன் நூல் எழுதினார். அதற்காகத்தான் கொல்லப்பட்டார். அந்த நூல் இலட்சக்கணக்கில் விற்கப்பட்டது. பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது.

இட ஒதுக்கீடுகளைப் பற்றி, "வேலைகளில் சலுகைகள், பொருளாதார உதவிகள், கல்வியில் வாய்ப்பு என்று எல்லாத் துறைகளிலும் தனிச் சலுகைகளையும், உரிமைகளையும் கோருவதை முற்றிலும் நிறுத்தி விட வேண்டும்" என்று கோல்வாக்கர் குறிப்பிடுகிறார். "ஜாதி அடிப்படையிலோ, வழிபாட்டு முறை அடிப்படையிலோ, தனியான அலாதியான விஷேச உரிமை கோருவது என்பது இந்து பாரம்பரியத்திற்கும் மத நம்பிக்கைக்கும் விரோதமானது. எனவே அதை நிறுத்தி விட வேண்டும்" இப்படி பல இடங்களில் தொடர்ந்து கூறுகிறார் கோல்வாக்கர்.

அடுத்தது, மாநிலங்களே கூடாது என்பது அவர்கள் கொள்கை. இந்த கொள்கைகளைத் தான் பாஜக தேர்தர் அறிக்கையிலும் தந்தது.

1934 வரை காங்கிரசிலும் இருக்கலாம், ஆர்.எஸ்.எஸ்.சிலும் இருக்கலாம் என்ற இரட்டை உறுப்பினர் முறை இருந்தது. 1934 இல் தான் நேரு கடுமையாக எதிர்த்து அப்படி இரட்டை உறுப்பினர் முறை கூடாது என்றார். அதன் பின் ஜனதா கட்சியில் அந்த சிக்கல் வந்தது. அப்போது ராஜ் நாராயணன் கடுமையாக எதிர்த்தார். அதனால் ராஜ் நாராயணன், ராம் நரேஷ் யாதவ், கற்பூரி தாகூர் ஆகியோரை கொலை செய்ய முயற்சித்தார்கள். ஆனால் தப்பித்து விட்டார்கள். ஜனதா கட்சியாக இருக்கிற போதே ஜனதா கட்சியில் இருக்கிற சமத்துவவாதிகளை கொலை செய்ய முயற்சித்தனர். இப்படி இரட்டை

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## விடுதலை இராஜேந்திரன் டுவிட்டரிலிருந்து...

1) ஆகம கோயில்களில் தூய்மை பணியாளர்களை நியமிக்க அற நிலையத் துறை ஆணை.

ஆகம கோயில்களில் அர்ச்சகராக நியமிக்கப்படும் பிரிவிலிருந்து இந்த நியமனமும் நடக்குமா ?

2) முகச் சிதைவுக்கு உள்ளான சிறுமிக்காக. மனம் வருந்தி சிகிச்சைக்கு ஏற்பாடு செய்த முதல்வரால், மனித முகமே இல்லாத விநாயகருக்கு எப்படி மகிழ்ச்சியுடன் வாழ்த்து கூறமுடியும்?

3) அனைத்து மாநிலங்களும் நீட் தேர்வை ஆதரிக்கும்போது, தமிழ்நாட்டில் ஸ்டாலின் மட்டும் ஏன் எதிர்க்கிறார் என்ற அண்ணாமலையாரின் கேள்விக்கு இதுதான் பதில்.

தமிழ்நாட்டில் அனைத்து கட்சிகளும் நீட்டை எதிர்க்கும் போது; பாஜக மட்டும் ஏன் ஆதரிக்கிறது ?

4) மோடியும், உச்சநீதிமன்றமும் இதையும் எதிர்ப்பார்களா ?

ஸ்பெயினில் இனி இரயில் பயணம் இலவசம்;

அமெரிக்க அதிபர் மாணவர்களின் கல்விக் கடனை இரத்து செய்து விட்டார்.

5) ராகுல் பாதயாத்திரையில் விலை உயர்ந்த வெளிநாட்டு சட்டையை போடலாமா என்று கேட்கிறார் அமித்ஷா.

காந்தியை போல் சட்டையே போடாமல் கையில் தடியுடன் ஊன்றி ஊன்றி போக வேண்டாமா ? என்ற கேள்வியையும் சேர்த்துக் கொள்ளுங்கள் பதில் சொல்லவே முடியாது.

## கோவையில் நடைபெற்ற நூல் திறனாய்வுக் கூட்டம்: கழகத் தலைவர் பங்கேற்று உரை

“மகாத்மா மண்ணில் மதவெறி !” நூல் அறிமுக விழா கோவை காந்திபுரத்தில் 01.09.22 வியாழன் மாலை நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி கருத்துரையாற்றினார்.

தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர், கு.ராமகிருட்டிணன் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். நூல் ஆசிரியர் ஜி. இராமகிருஷ்ணன் (சிபிஐ(எம்)அரசியல் தலைமைக் குழு) ஏற்புரை ஆற்றினார்.

## திராவிட மாடல் பயிற்சி பாசறையில் கொளத்தூர் மணி தொடர்ந்து உரையாற்றி வருகிறார்

திமுக இளைஞர் அணி சார்பில் “திராவிட மாடல் பயிற்சிப் பாசறை” தொடர்ச்சியாக தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று வருகிறது. பாசறையில் திராவிட இயக்க வரலாறு, மாநில சுயாட்சி ஆகிய இரண்டு தலைப்புகளில் திராவிட இயக்கத் தலைவர்கள், ஆய்வாளர்கள் உரையாற்றி வருகின்றனர்.

இதில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி, “திராவிட இயக்க வரலாறு” என்ற தலைப்பில் 10.09.2022 அன்று காலை 10 மணிக்கு நெய்வேலியிலும், மாலை 4 மணிக்கு கடலூர் பண்ருட்டியிலும் உரையாற்றினார்.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் முறையை வைத்துக் கொண்டு அமைச்சரவையிலும் பல சிக்கல்களை ஏற்படுத்தினர். வாஜ்பாய் வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த போது தான் வெளி நாடுகளில் ஆர்.எஸ்.எஸ். பரவியது.

இந்த நாட்டில் இருப்பவர்களை அதாவது மண்ணின் மைந்தர்களை எப்படி குறிப்பிடுகிறார்கள் என்றால், “பாரசீகர்களும், யூதர்களும் தங்கள் சொந்த நாட்டில் இருந்து இந்தியாவிற்கு அகதிகளாக வந்தவர்கள். அவர்கள் பிரச்னையில்லை. ஆனால் கிறிஸ்துவர்களும், முஸ்லீம்களும் இந்த இந்த நாட்டை ஆக்கிரமிப்பவர்களாக வந்தவர்கள், நம்மை அழிக்க வந்தவர்கள், தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட வந்தார்கள், உள்ளூர் மக்களை அடிமைப் படுத்த வந்தார்கள். இருவரையும் ஒன்றாக பார்க்க முடியாது” என்கிறார்.

அடுத்தது ஆரியர் என்பதில் பெருமை கொள்ள வேண்டும். இரண்டாவது வட்ட மேசை மாநாட்டிற்கு சென்ற டாக்டர் மூஞ்சே, அங்கிருந்து நேராக இத்தாலிக்குச் செல்கிறார்.

இத்தாலிக்குச் சென்று முசோலினியை சந்திக்கிறார். முசோலினியின் இளைஞர் அமைப்புகளை பார்க்கிறார். அதைத்தான் ஆர்.எஸ்.எஸ் - ற்கும் கொண்டு வருகிறார்கள். முசோலினையைப் பார்த்து தான் இங்கே இராணுவப் பள்ளிகளை நிறுவுகிறார்கள். அப்போது, “அரசியலை இந்து மயமாக்கு, இந்துக்களை இராணுவ மயமாக்கு, இராணுவத்தை இந்து மயமாக்கு” இந்த கொள்கையைத் தான் தற்போது ‘அக்னிபாத்’ ஆக கொண்டு வருகின்றனர்.

இந்தத் தத்துவங்களை செயல்படுத்துவதைத் தான் கொள்கையாக கொண்டுள்ளது பாரதிய ஜனதா கட்சி, என்பதை நாம் அறிந்து கொண்டு பேச வேண்டிய தேவையும் இருக்கிறது. (நிறைவு)

## பார்ப்பன மயமாகும் ரெப்கோ?

### பர்மா, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்களின்



### வீட்டுக்கடன் தேவைக்கு முன்னுரிமை தந்து



### சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு தொடங்கப்பட்ட

### REPCO HOME FINANCE LTD

- வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு இல்லையா?
- தமிழ்நாடு அரசு மறுவாழ்வுத் துறை செயலரை மாற்றி, தனியாரை தலைவராக நியமித்தது ஏன்?
- எண்பது வயதைக் கடந்தும், முன்னாள் இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையர் தலைவராக தொடரலாமா?
- இயக்குநர் குழுவில் உள்ள தமிழ்நாடு அரசின் ஐ.ஏ.எஸ். அதிகாரி கவனம் செலுத்துவாரா?
- கடந்த பத்தாண்டுகளாக பாழான நிறுவனம் மீட்கப்படுமா?
- 16.9.2022 வாயிற் கூட்டத்தில் விடை கிடைக்குமா?

முனைவர் திரு @ திருவேங்கடம்,
MA, BL, CAIIB, Ph.D.
நிறுவிய இயக்குநர்.
ரெப்கோ வீட்டுக்கடன் நிறுவனம்
8056240996

## தோழர்கள் விடுதலை

விநாயகர் சிலை ஊர்வலத்திற்கு எதிராக பெரியார் கைத்தடி ஊர்வலம் சென்னை கழகத்தின் சார்பாக அய்ஸ் ஹவுஸ் பகுதியில் 16.09.2018 அன்று மாவட்ட செயலாளர் இரா.உமாபதி தலைமையில் நடைபெற்றது.

ஊர்வலத்தில் எச்.இராஜாவைக் கண்டித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன. இதற்காக மாவட்ட செயலாளர் உமாபதி உள்ளிட்ட 6 தோழர்களின் மீது வழக்கு பதியப்பட்டது. கடந்த நான்கு ஆண்டுகளாக நடைபெற்ற வழக்கு 07.09.2022 அன்று நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டது.

தோழர்களுக்காக வழக்கறிஞர் திருமூர்த்தி வாதாடினார்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.250
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 15th September 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN